

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 258 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – சித்திரை 15 – திங்கள்கிழமை 28 ஏப்ரல் 2025 – திருச்சி ★★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 258 : Thiruvalluvar Year - 2056 - Chithirai 15 - Monday 28 April 2025 - Trichy ★★ 16 Pages ₹ 5.00


## திராவிட மாடல் ஆட்சியில், மிகுந்த நம்பிக்கையுடன் கொண்டு வரப்பட்ட

# “நான் முதல்வன்” திட்டத்தினால் நல்ல பலன்!

## சிவில் சர்வீசஸ் தேர்வில் வெற்றி பெற்றுள்ளவர்களைப் பாராட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

**சென்னை, ஏப்.28 -**

**“திராவிட மாடல் ஆட்சியில், மிகுந்த நம்பிக்கையுடன் கொண்டு வரப்பட்ட “நான் முதல்வன்” திட்டத்தினால் நல்ல பலன் கிடைத்துள்ளது” என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சிவில் சர்வீசஸ் தேர்வில் வெற்றி பெற்றுள்ளவர்களைப் பாராட்டி உரையாற்றும் போது பெருமிதத்துடன் கூறினார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (26.4.2025) சென்னை, அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியில் நடைபெற்ற “நான் முதல்வன்” திட்டம் மற்றும் அகில இந்திய குடிமைப் பணித் தேர்வு பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்று இந்திய குடிமைப் பணித் தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கான பாராட்டு விழாவில் ஆற்றிய உரை வருமாறு:-

குடிமைப் பணி தேர்வில் வெற்றி பெற்று தமிழ்நாட்டிற்கு பெருமைச் சேர்த்திருக்கக் கூடிய மாணவச் செல்வங்களே,

அவர்களுக்கு உறுதுணையாக இருந்திருக்கக்கூடிய, உறுதுணையாக இருந்தது மட்டுமல்ல, இந்த நிகழ்ச்சிக்கு வருகை தந்து பெருமை சேர்த்திருக்கக்கூடிய இங்கே பெருமையோடு அமர்ந்திருக்கக்கூடிய மாணவர்களுடைய பெற்றோர்களே,

UPSC தேர்வில் வெற்றி பெற்றுள்ள உங்கள் எல்லோரையும் நான் முதலில் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன். உங்கள் எல்லோருக்கும் என்னுடைய வாழ்த்துகளை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**மாணவர்கள் வாழ்க்கையில் மறுமலர்ச்சி!**

நம்முடைய திராவிட மாடல் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, தமிழ்நாட்டில் கல்வியை மேம்படுத்த வேண்டும். மாணவர்களுடைய வாழ்க்கையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்று நாங்கள் திட்டமிட்டோம். பள்ளிக்கல்வி - கல்லூரிக் கல்வியைக் கடந்து, மாணவர்களுடைய திறனை மேம்படுத்துவதற்காக ஒரு திட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று நாங்கள் எல்லாம் நினைத்தோம். அதிலும் குறிப்பாக, வளர்ந்து வரக்கூடிய தொழில்நுட்பம் – அந்த வேலை வாய்ப்புகளுக்கு ஏற்ற மாதிரி, நம்முடைய மாணவர்களுடைய ‘Skills’ வளரவேண்டும். எப்படிப்பட்ட போட்டித் தேர்வாக இருந்தாலும், அதை ‘Crack’ செய்கின்ற அளவுக்கு நம்முடைய மாணவர்களுக்குப் பயிற்சி கிடைக்கவேண்டும்; அதையும் நம்முடைய அரசே செய்யவேண்டும் என்று நாங்கள் முடிவெடுத்தோம்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.4.2025) சென்னை, அண்ணா நிருவாக பணியாளர் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், “நான் முதல்வன்” திட்டம் மற்றும் தமிழ்நாடு அரசால் நடத்தப்பட்டு வரும், அகில இந்திய குடிமைப் பணித் தேர்வு பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்று இந்திய குடிமைப் பணி தேர்வில் வெற்றி பெற்ற 50 மாணவ, மாணவியர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கி வாழ்த்தினார். இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திருமதி என்.கயல்விழி செல்வராஜ், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், அண்ணா நிருவாக பணியாளர் கல்லூரியின் கூடுதல் தலைமைச் செயலாளர் / பயிற்சித் துறை தலைவர் விக்ரம் கபூர், மனிதவள மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் கிராந்தி குமார் பாடி, நான் முதல்வன் போட்டி தேர்வு சிறப்பு திட்ட இயக்குநர் சி.சுதாகரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**எனது பிறந்தநாளில் தொடங்கி வைக்கப்பட்ட திட்டத்தில் நல்ல பலன்!**

இந்தத் திட்டத்தில் பயன்பெறும் மாணவர்களும் - இளைஞர்களும் நிச்சயமாக தங்களுடைய இலட்சியங்களை அடைய வேண்டும்; வாழ்க்கையில் முன்னேற்றம் அடையவேண்டும்; வளர்ந்து வரவேண்டும்; என்பதற்காகத் தான் ‘நான் முதல்வன்’ என்று பெருமைப்படக்கூடிய அளவுக்கு இந்தத் திட்டத்தை ‘நான் முதல்வன்’ என்கின்ற அந்த அடிப்படையில்தான் இதை உருவாக்கி இருக்கிறோம்.

‘நான் முதல்வன்’ என்கின்ற தன்னம்பிக்கை ஊட்டுகின்ற பெயர் வைத்து, 2022-ஆம் ஆண்டில் என்னுடைய பிறந்தநாள் அன்று தான் தொடங்கி வைத்தேன். உங்கள் மீதும், இந்தத் திட்டத்தின் மீதும் நாங்கள் வைத்த நம்பிக்கை பலனளித்திருக்கிறது என்ற செய்தியைப் பார்க்கின்றபோது மகிழ்ச்சியோடும், பெருமையோடும், நீங்கள் எல்லாம் எப்படி ஒரு பூரிப்புடனும், புளகாங்கித உணர்வுடனும் கலந்து கொண்டிருக்கிறீர்களோ, அதேபோலத் தான் நாங்களும் இந்த நிகழ்ச்சியில் மகிழ்ச்சியாக கலந்து கொள்ள வந்திருக்கிறோம்.

சாமானிய வீடுகளில், பிறந்து சாதனையாளர்களாக நாளைய வரலாற்றை எழுதக் கூடியவர்களாக வளர்ந்திருக்கின்றீர்கள். உங்களைப் பாராட்டுவது, திராவிட இயக்கத்தின் வழிவந்திருக்கக்கூடிய எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது!

**கல்விதான் நமக்கான ஆயுதம்!**

கல்விதான் நமக்கான ஆயுதம்! எந்த இடர் வந்தாலும், கல்வியை மட்டும் நாம் விட்டுவிடக் கூடாது! அதனால்தான், “முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தோம். அதைத் தொடர்ந்து “புதுமைப்பெண்” திட்டம், “தமிழ்ப்புதல்வன்” திட்டம், “கல்லூரிக் கனவு” திட்டம், “சிகரம் தொடு” திட்டம், “உயர்வுக்குப் படி” திட்டம் என்று ஏராளமான திட்டங்களைத் தொடங்கி, கல்வியைக் கொடுத்து, “நான் முதல்வன்” போன்ற திட்டங்களால் “Upskill” செய்து, பெரிய பெரிய நிறுவனங்களில் நம்முடைய வீட்டுப் பிள்ளைகள் “Placement” ஆனதைப் பார்க்கின்றபோது நாம் பூரிப்பு அடைகிறோம்.

தமிழ்நாட்டிற்கு என்று ஒரு ‘அறிவுமுகம்’ இருக்கிறது! ஒரு ஐ.ஏ.எஸ் – ஒரு ஐ.பி.எஸ் தமிழ்நாட்டு கேடராக இருந்தால், அவர்களுக்கான மதிப்பே தனி! அதுவும் அவர்கள் தமிழ்நாட்டுக்காரர்களாக இருந்தால், இன்னும் மதிப்பு கூடுதலாகிவிடும்! ஆனால், கடந்த சில ஆண்டுகளாக UPSC தேர்வுகளில் நம்முடைய இளைஞர்கள் தேர்வாவது குறைந்துவிட்டது. ஆனால், இன்றைக்கு அந்தக்கவலையை நீங்கள் நீக்கிவிட்டீர்கள். குடிமைப் பணித் தேர்வுகளுக்குத் தயாரான உங்களுக்கு, நம்முடைய அரசு எப்படியெல்லாம் பயிற்சி கொடுத்தது – ஊக்கம் கொடுத்தது – உங்களுடைய சுமைகளைக் குறைக்க ஊக்கத்தொகை எல்லாம் கொடுத்தது என, உங்களில் பலரும் ஊடகங்களுக்குக் கொடுத்த பேட்டிகளில் எல்லாம் அதனைச் சொல்லியிருக்கிறீர்கள். அதையெல்லாம் நாங்கள் பார்த்தோம். இதுவே, இன்னும் பல பேரை ஐ.ஏ.எஸ். – ஐ.பி.எஸ்–ஆக ‘Motivate’ செய்யவேண்டும்!

**அதிகாரம் என்பது - சமூகத்திற்கு உதவிட வேண்டும்!**

மற்றவர்களுக்கு உதவுவதற்கான உங்கள் பணியை, நீங்கள் தேர்வான அன்றைக்கே தொடங்கிவிட்டீர்கள். அதிகாரம் என்பது இந்தச் சமூகத்துக்கும் – சக மனிதர்களுக்கும் – எளியோர்களுக்கும் உதவுவதாக – அவர்களுடைய வாழ்க்கை முன்னேற்றத்துக்குப் பயன்படுவதாக அமையவேண்டும்.

இன்றைக்கு அதிகாரம் உங்கள் கைகளை நோக்கி வர இருக்கிறது. அதை நீங்கள் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். உங்களுக்கு “Roll Model” –ஆக பல பேர் இருப்பார்கள். இனிமேல் நீங்கள் பல பேருக்கு Roll Model ஆகவேண்டும் – அதுதான் என்னுடைய விருப்பம். இன்றைக்குத் தேர்வாகி இருக்கின்ற நீங்கள் சிறப்பாகப் பணியாற்றுவதன் மூலமாக தான் அந்த நிலையை அடையமுடியும்.

**ஏழை, எளிய மக்களின் உயர்வுக்காகப் பணியாற்றுங்கள்!**

என்னுடைய பொதுவாழ்க்கை அனுபவத்தில் இருந்து இதைச் சொல்கிறேன். முதலில் மக்களுடைய மனதில் இடம் பெற வேண்டும். சமூகநீதி – நேர்மை – துணிவு ஆகியவற்றை மனதில் வைத்துக் கொண்டு, ஏழை எளிய மக்களுடைய உயர்வுக்காகப் பாடுபடுங்கள். இந்த மூன்றையும் மனதில் வைத்துக் கொண்டு பணியாற்றினால், மக்கள் நிச்சயமாக நம்மை மறக்கமாட்டார்கள்.

**சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே!**

“ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும்” என்று வள்ளுவர் சொன்ன மகிழ்ச்சியை, இப்போது நீங்கள் உங்கள் பெற்றோருக்குக் கொடுத்திருக்கிறீர்கள். என்னைப் பொறுத்தவரையில், புறநானூறில் சொன்ன “சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே” என்ற கடமையை நிறைவேற்றிய மகிழ்ச்சியை எனக்குக் கொடுத்திருக்கிறீர்கள். நான் அடுத்த முறை உங்களைச் சந்தித்தாலும், உங்களுடைய பணிகளையும், சாதனைகளையும் சொல்லி வாழ்த்தவேண்டும்; அதுதான் என்னுடைய ஆசை. எனக்கு அந்த நம்பிக்கை உங்கள் முகங்களைப் பார்க்கும்போது நிச்சயமாக வருகிறது.

உங்களை மீண்டும் வாழ்த்தி, என் உரையை நிறைவு செய்கிறேன். வாழ்க! வளர்க!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

## முன்னாள் சட்டமன்ற — மேலவை

# உறுப்பினர்களுக்கான ஓய்வூதியம் உயர்வு!

## சட்டப்பேரவையில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, ஏப். 28 -**

**“முன்னாள் சட்டமன்ற - மேலவை உறுப்பினர்களுக்கான ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம் மற்றும் மருத்துவப் படி உயர்த்தி வழங்கப்படும்” என்று சட்டப் பேரவையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்.**

முன்னாள் சட்டமன்ற / மேலவை உறுப்பினர்களுக்கான ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதிய மற்றும் மருத்துவப் படியினை உயர்த்தி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.4.2025) ஆற்றிய உரை வருமாறு:-

நம்முடைய துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி அவர்கள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுடைய ஓய்வூதியத்தைப் பற்றி இங்கே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார். அதேபோன்று, உறுப்பினர் ஜெகன் மூர்த்தி அவர்களும் பேசுகிறபோது அதைக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, ஒட்டுமொத்தமாக பல சட்டமன்ற உறுப்பினர்கள் இதுகுறித்து என்னிடத்திலே கோரிக்கையும் வைத்திருக்கிறார்கள். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுடைய அமைப்பைச் சார்ந்தவர்களும் என்னை வந்து நேரடியாகச் சந்தித்து இதுகுறித்து மனுவைத் தந்திருக்கிறார்கள்.

எனவே, அதையெல்லாம் பரிசீலித்துப் பார்த்து, முன்னாள் சட்டமன்றப் பேரவை மற்றும் மேலவை உறுப்பினர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரக்கூடிய மாத ஓய்வூதிய 30 ஆயிரம் ரூபாய் என்பதை, 35 ஆயிரம் ரூபாயாக 1.4.2025 முதல் உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

தற்போது வழங்கப்பட்டு வரக்கூடிய முன்னாள் சட்டமன்றப் பேரவை மற்றும் மேலவை உறுப்பினர்களுக்கான குடும்ப ஓய்வூதியத்தைப் பொறுத்தவரையில், மாதம் 15 ஆயிரம் ரூபாய் என்பது, மாதமொன்றுக்கு 17,500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

முன்னாள் சட்டமன்றப் பேரவை மற்றும் மேலவை உறுப்பினர்களுக்கு தற்போது ஆண்டொன்றிற்கு வழங்கப்பட்டு வரும் மருத்துவப் படி 75 ஆயிரம் ரூபாய் என்பது, ஒரு இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

ஏற்கெனவே, இந்த ஆண்டின் மருத்துவப் படித் தொகை வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 25 ஆயிரம் ரூபாய், இதற்கான விதிகளில் திருத்தம் செய்யப்பட்டு பின்னர் வழங்கப்படும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

## துணைவேந்தர்களுக்கு ஆளுநர் நெருக்கடி!

### திருமாவளவன் குற்றச்சாட்டு!

திருச்சி, ஏப். 28 –

திருச்சியில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு: –

மும்பை தாக்குதலுக்கு பொறுப்பேற்று அன்றைய உள்துறை அமைச்சர் சிவராஜ் பாட்டீல் பதவி விலகி முன்மாதிரியாக விளங்கினார்.

அதுபோல் காஷ்மீர் பஹல்காமில் நடந்த பயங்கரவாத தாக்குதலுக்கு பொறுப்பேற்று அமித்ஷா பதவி விலக வேண்டுமென மீண்டும் வலியுறுத்துவோம். காஷ்மீரில் நடந்த தாக்குதல் இருநாட்டுக்கும் போராக மாறிவிடக் கூடாது. காஷ்மீர் விவகாரத்தில் ஒன்றிய அரசின் நடவடிக்கைகள் பயங்கரவாதத்தை ஒடுக்குவதற்கு பயன்படவில்லை. இந்த தாக்குதல் மதத்தை பார்த்து நடந்ததுபோல் தெரியவில்லை. ஒன்றிய அரசுக்கு எதிராக நடத்தப்பட்ட தாக்குதலாகவே தெரிகிறது. காஷ்மீருக்கு வரும் மக்கள், சுற்றுலா பயணிகளுக்கு எச்சரிக்கை விடும் விதமாகவே இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

வக்பு வாரிய சட்டத் திருத்தத்தைக் கண்டித்து மே 31ம் தேதி திருச்சியில் மிகப்பெரிய பேரணி நடத்தவுள்ளோம். ஆளுநர் ஆர்.என்.ரவிக்கும், தமிழ்நாடு அரசுக்கும் முரண்பாடுகள் கூர்மை அடைந்துள்ளன. உச்ச நீதிமன்ற தீர்ப்புக்கு பின் பல்கலைக்கழக துணை வேந்தர்கள் மாநாட்டுக்கு அழைப்பு விடுத்து தமிழ்நாடு அரசுக்கும், துணைவேந்தர்களுக்கும் நெருக்கடியை ஆளுநர் திட்டமிட்டு உருவாக்கியுள்ளார். துணைவேந்தர்கள் மாநாட்டை புறக்கணித்துள்ளனர். ஆளுநரின் இதுபோன்ற செயல்பாடு அவர் வகிக்கும் பொறுப்புக்கு அழகல்ல.

இவ்வாறு அவர் கூறினார்.